கருநாடக அரசு

கணிதம்

MATHEMATICS

பாடநூல் மற்றும் பயிற்சியேடு

4

நான்காம் வகுப்பு

பாகம் - II

FOURTH STANDARD

Part - II

KARNATAKA TEXT BOOK SOCIETY (R.)

6th Cross, Malleshwaram,

Bengaluru- 560 003.

@KTBS
NOT TO BE REPUBLISHED

பாகம் - II

பொருளடக்கம்

K8V6G6

வ.எண்	பொருள்	பக்கம்
10	பணத்தைக் கூட்டுதல் மற்றும் கழித்தல்	1 - 25
11	அளவுகள் - நீளம்	26 - 42
12	அளவுகள் - எடை	43 - 56
13	கொள்ளளவு	57 - 69
14	காலம்	70 - 89
15	விவரம் சேகரித்தல்	90 - 98
16	தோரணிகள் மற்றும் சீர்மை	99 - 114
17	டேன்கிராம்ஸ் மற்றும் பரப்புகள்	115 - 120
18	கன உருவங்கள்	121 -132

@KTBS NOT TO BE REPUBLISHED

அலகு 10

பணத்தைக் கூட்டுதல் மற்றும் கழித்தல்

X7K3J8

இவ்வலகை கற்றபின் நீ:

- குழுக்களை அமைத்து பணத்தை கூட்டுவாய் மற்றும் கழிப்பாய்.
- பொருட்களின் மொத்த விலை, மற்றும் ஒன்றை விட அதிக பொருட்களின் விலையை, கணிதத்தின் அடிப்படைச் செயல்களைப் பயன்படுத்தி கணக்கிடுவாய்.
- விலைப்பட்டியல் மற்றும் பில்லைப் பற்றி விவரிப்பாய்.

@KTBS NOT TO BE REPUBLISHED

கடந்த வகுப்பில் ரூபாயை பைசாவாக்கும், பைசாவை ரூபாயாகவும் மாற்றுவது மற்றும் பணத்தைக் கூட்டுவதையும், கழிப்பதையும் கற்றுக் கொண்டாய்.

இவற்றை நினைவு கூறுக:

- ஒரு ரூபாய்க்கு 100 பைசா.
- ரூபாயை பைசாவாக மாற்றும்பொழுது ரூபாயை 100 ஆல் பெருக்க வேண்டும்.
- பைசாவை ரூபாயாக மாற்றும் பொழுது பைசாவை 100 ஆல் வகுக்க வேண்டும்.

I. கீழ் காண்பனவற்றைப் பூர்த்தி செய்கம்.

1) ₹10 = ... பைசா

2) ₹15 = ... பைசா

3) ₹ 6. 25 = ... பைசா

4) 500 பைசா = ... போய்

5) 657 பைசா = ... ரூபாய் மற்றும் .... பைசா

II. **குறிப்பிட்டவாறு தீர்க்கவும்**

அ

	ரூபாய்	பைசா
	26	50
(+)	23	50
விடை		

ஆ

	ரூபாய்	பைசா
	49	50
(–)	30	25
விடை		

பணத்தைக் கூட்டுதல்

குழுக்கள் அமைப்பதன் மூலம் அட்டவணையில் எழுதிக் கூட்டுவது எப்படி என்பதை அறிக.

நாம் கடையில் இருந்து வெவ்வேறு பொருட்களை வாங்குகின்றோம். அவற்றிற்கான பணத்தை கொடுக்கும்போது நாம் மொத்தமாக கொடுக்கின்றோம். நாம் கொடுத்த மொத்த பணம், மொத்த தொகையை விட அதிகமாக இருந்தால் நாம் கொடுத்த அதிகப் பணத்தை கடைக்காரர் திருப்பிக் கொடுப்பார்.

கடந்த வகுப்பில் பணத்தை இடமாற்றத்துடன் கூட்டுவதைக் கற்றாய். அதை நினைவுபடுத்திக் கொண்டு மற்ற கணக்குகளைத் தீர்ப்பாய்.

இரவி ஒரு எழுது பொருள் அங்காடியில் இருந்து ₹7.50 மதிப்புள்ள ஒரு நோட்டுப்புத்தகத்தையும், ₹4.50 மதிப்புள்ள பென்சிலையும் வாங்கினான்.அவன் கடைக்காரருக்கு கொடுக்க வேண்டிய மொத்தப் பணம் எவ்வளவு?

₹ 7.50 க்கு ₹4.50 வை கூட்டினால் மொத்தம் என்ன?

₹ 12.00 அல்லவா ?

₹ 12.00 என்பதை எப்படி அறிந்தாய்?

நோட்டுப்புத்தகத்தின் விலை	₹ 7.50
பென்சிலின் விலை	₹ 4.50
மொத்தப் பணம்	₹ 12.00

NOT TO BE REPUBLISHED @KTBS

நிலை 1) 50 பைசா + 50 பைசா = 100 பைசா அல்லவா?

100 பைசா = 1 ரூபாய் என்பதை நீ அறிவாய்.

எனவே பைசாவின் இடத்தில் 0 எழுதி 1 ரூபாயை, ரூபாய்க்கான இடத்தில் எழுதுக.

நிலை 2) ரூபாயுடன் ரூபாயைக் கூட்டவும்

₹1 + ₹ 7 + ₹4 = ₹12

எனவே, இரவி கடைக்காரக்கு கொடுக்க வேண்டிய மொத்தப்பணம் ₹ 12 ஆகும்.

எடுத்துக்காட்டு 2:

₹75.80 க்கு ₹125.90 ஐக் கூட்டுக

ரூபாய்	பைசா
(1) 75 125	80 90
201	70

80 + 90 = 170 பைசா

80 பைசா
90 பைசா
170 பைசா

170

நீ ஏற்கனவே அறிந்தது போல ரூபாய்க்கான கட்டத்தில் உள்ளவற்றை கூட்டுக.

விடை ₹201.70

கவனி : பணத்தை கூட்டும்பொழுது.

1) ரூபாய்க்கான கட்டத்தில் ரூபாயை எழுதுக.

2) பைசாவுக்கான கட்டத்தில் பைசாவை எழுதுக.

3) பைசாக்களை பைசாக்களுடன் கூட்டி பைசாவின் கட்டத்தில் எழுதுக.

4) ரூபாயை ரூபாயுடன் கூட்டி ரூபாய்யின் கட்டத்தில் எழுதுக.

5) பைசாவை பைசாவுடன் கூட்டும்போது 100 பைசாவோ அல்லது அதைவிட அதிகமாகவோ வந்தால், அதை ரூபாயாக மாற்றி, எண்களை கூட்டுவது போலவே பணத்தையும் கூட்ட வேண்டும்.

@KTBS NOT TO BE REPUBLISHED

மாதிரி கணக்குகள்.

எடுத்துக்காட்டு 1 :

ரூபாய்	பைசா
① (+) 29 76	61 45
106	06

- ரூபாயை ரூபாயுடன் கூட்டுக.
- பைசாவை பைசாவுடன் கூட்டுக
- இடமாற்றத்துடன் எண்களை கூட்டும்முறையைப் பின்பற்றிக் கூட்டுக.

விடை ₹106.06

எடுத்துக்காட்டு 2 :

ரூபாய்	பைசா
① ①	①
3 6	54
7 3	42
(+) 5 1	27
161	23

விடை ₹161.23

எடுத்துக்காட்டு 3 :

₹14.55, ₹22.17 மற்றும் ₹8.34 ஐக் கூட்டுக.

ரூபாய்	பைசா
14	55
22	17
8	34
45	06

- எண்களில் உள்ள புள்ளிகளை ஒன்றன்கீழ் மற்றொன்று வருமாறு எழுதுக.
- இடமாற்றத்துடன் கூட்டும் வகையில் எண்களை கூட்டுக.

விடை ₹ 45. 06

@KTBS
NOT TO BE REPUBLISHED

வழிக்கணக்குகள்

எடுத்துக்காட்டு 1 :

அமித் ₹18.50 க்கு ஒரு புத்தகமும், ₹19.50 க்கு கலர் பென்சில் பாக்சும் வாங்குகிறான். அவன் கொடுக்க வேண்டிய மொத்தப்பணம் எவ்வளவு?

கடந்த வகுப்பில் மொத்தப்பணத்தைக் கண்டுபிடிப்பது எப்படி என்பதை கற்றுக் கொண்டீர்கள்.

கணிதத்தின் எந்த அடிப்படை செயலைச் செய்ய வேண்டும் என்பதை நினைவு கூர்ந்து கணக்கைச் செய்யவும்.

புத்தகத்திற்காக கொடுத்த பணம்	=	₹ 18.50
கலர் பென்சில் பாக்சிற்காக கொடுத்த பணம்	=	₹ 19.50
அமித் கொடுக்க வேண்டிய மொத்த பணம்	=	₹ 38.00

எடுத்துக்காட்டு 2 :

இராதாவிடம் ₹15.00, சல்மானிடம் ₹25.00, மேரியிடம் ₹17.05 உள்ளது. இவர்களிடம் உள்ள மொத்த பணம் எவ்வளவு?

இராதாவிடம் உள்ள பணம்	=	₹ 15.00
சல்மானிடமுள்ள பணம்	=	₹ 25.00
மேரியிடம் உள்ள பணம்	=	₹ 17.05
3 பேரிடம் உள்ள மொத்த பணம்	=	₹ 57.05

NOT TO BE REPUBLISHED ©KTBS

கவனிக்க :

வழிக்கணக்குகளை தீர்க்கும்போது.

- கொடுக்கப்பட்டுள்ள விவரங்களை வாக்கியங்களாக எழுதிக் கொள்க.
- மொத்தப்பணம் எவ்வளவு என்று கேட்டபோது கூட்டுக.

பயிற்சி 10.1

I. **கூட்டுக**

1)
₹29.60
₹61.75
₹78.50
____

2)
₹50.50
₹19.00
₹44.50
____

II. **அ)** ₹7 **ஐ** ₹8.50 **உடன் கூட்டுக**

ஆ) ₹45.35 **ஐ** ₹33.29 **உடன் கூட்டுக.**

III.

1) **அமுல்யாவிடம்** ₹25.50 **உள்ளது, இவளுடைய சித்தி இவளுக்கு** ₹50 **ஐக் கொடுத்தால் அமுல்யாவிடம் உள்ள மொத்தப் பணம் எவ்வளவு?**

அமுல்யாவிடம் உள்ள பணம் =

அமுல்யாவின் சித்தி கொடுத்த பணம் =

அமுல்யாவிடம் உள்ள மொத்த பணம் = ₹

@KTBS NOT TO BE REPUBLISHED

2) **ஒரு புத்தகக் கடையில் கிடைக்கும் புத்தகங்களின் விலைப்பட்டியல் கீழ்வருமாறு.**



இரவி புத்தகக் கடையில் இருந்து இந்த 3 புத்தகங்களை வாங்குகிறான்.அவன் கொடுக்க வேண்டிய மொத்த பணம் எவ்வளவு?

புத்தகத்தின் பெயர்	விலை	
	ரூபாய்	பைசா
விடுகதைப் புத்தகத்தின் விலை		
பஞ்சதந்திர கதைப் புத்தகத்தின் விலை		
நகைச்சுவை கதைப் புத்தகத்தின் விலை		
மொத்த விலை		

இரவி கடைக்காரருக்கு கொடுக்க வேண்டிய மொத்தப்பணம் :₹

3) **தாமஸ் ஒரு கணிதப் புத்தகத்தை ₹47.50-க்கும் விஞ்ஞானப் புத்தகத்தை ₹ 35.25-க்கும், ஒரு நோட்டுப்புத்தகத்தை ₹ 18 க்கும் வாங்கினால், அவன் கடைக்காரருக்கு கொடுக்க வேண்டிய மொத்தப் பணம் எவ்வளவு?**

___

___

___

___

@KTBS NOT TO BE REPUBLISHED

4) **சுரேகா** 3 **பந்துக்களை** ₹30 **க்கும்,** 5 **பென்சில்களை** ₹12.50 **க்கும்** 4 **நோட்டுப்புத்தகங்களை** ₹20 **,க்கும் வாங்கினால், அவள் கடைக்காரருக்கு கொடுக்க வேண்டிய மொத்தப் பணம் எவ்வளவு?**

___

___

___

செயல்பாடு: தினப்பத்திரிக்கை விளம்பரத்தை படித்து அதிலிருந்து 4 **புத்தகங்களின் விலைகளை எழுதிக் கொண்டு அவற்றை வாங்குவதற்குத் தேவையான மொத்த தொகையைக் கண்டுபிடிக்கவும்.**

___

___

___

@KTBS
NOT TO BE REPUBLISHED

பணத்தைக் கழித்தல்

தொகுப்புகள் அமைப்பதன் மூலம் ரூபாய் மற்றும் பைசாக்களை கட்டங்களில் எழுதி கழிக்கும் முறையை அறிந்து கொள்க.

கட்டங்களில் ரூபாய் மற்றும் பைசாவை எழுதி கழிப்பது எப்படி என்பதை கடந்த வகுப்பில் அறிந்து கொண்டாய்.

இதை நினைவு கூர்ந்து மற்ற கணக்குகளைத் தீர்க்க.

எடுத்துக்காட்டு **1:** ₹ 79.80 இலிருந்து ₹69.90 ஐக் கழிக்க.

ரூபாய்	பைசா
7 9̸ ⑧ (-) 6 9	8 0 9 0
0 9	9 0

விடை : ₹9.90

நிலைகள் :

1) ரூபாயை ரூபாய்க்கான கட்டத்தில் எழுதுக.

2) பைசாவை பைசாவுக்கான கட்டத்தில் எழுதுக.

3) பைசாவை பைசாவில் இருந்து கழிக்க.

80 பைசாவில் இருந்து 90 பைசாவைக் கழிக்க முடியுமா? சிந்திக்க அது முடியாது.

1 ரூபாயை ரூபாய்க்கான கட்டத்தில் இருந்து எடுத்துக் கொண்டு அதைப் பைசாவாக மாற்றுக.

100 பைசாவிற்கு 80 பைசாவைக் கூட்டுக

100 +80 =180 பைசா ஆகிறது

180 பைசா
-90 பைசா
90 பைசா

180 பைசாவிலிருந்து 90 பைசாவைக் கழிக்க முடியுமா?.

90 பைசா என்ற விடையை பைசாவின் கட்டத்தில் எழுதுக.

₹79 லிருந்து பைசா கட்டத்திற்கு ₹1 கொடுத்தேன். எனவே ரூபாய்க் கட்டத்தில் எவ்வளவு ரூபாய் உள்ளது? சிந்திக்க.

₹79-₹1 = ₹78

₹78 லிருந்து ₹69 ஐக் கழிக்க

இதை இடமாற்றத்துடன் கழிக்கும் முறையிலேயே கழிக்க.

விடையான ₹78 - ₹69 = ₹09 ஐ ரூபாய்க்கான கட்டத்தில் எழுதுக.

எடுத்துக்காட்டு 2 : ₹ 125,47 இலிருந்து ₹114.48-ஐக் கழிக்க.

ரூபாய்	பைசா
12~~5~~ ④	47
- 114	48
010	99

விடை ₹10.99

@KTBS NOT TO BE REPUBLISHED

எடுத்துக்காட்டு 1 இல் இருப்பது போல கழிக்க.

(13)(17) 147 பைசா 48 பைசா 99 பைசா	(இடமாற்றத்துடன் எண்களைக் கழிப்பது போலவே கழிக்க)	₹124 - ₹114 ₹124 -₹114 ₹010

கவனி

- குழுக்களில் பணத்தை கழிக்கும்போது இடமாற்றத்துடன் எண்களை கழிப்பது போலவே கழிக்க.
- அன்றாட வாழ்க்கைச் சூழ்நிலைகளில் ₹3.47, ₹5.42 போன்ற சில்லரை பணத்தை பயன்படுத்துவதில்லை. வங்கியில் வட்டிப்பணத்தை கணக்கிடும்போது, மின் கட்டணம், நீர்க்கட்டணம், வரி முதலியவற்றை கணக்கிடும் சமயத்தில் இத்தகைய சில்லரை வரும்போது, அதை ரூபாய்க்கு தோராயமாக்குகின்றோம்.

© KTBS NOT TO BE REPUBLISHED

மாதிரிக் கணக்குகள்.

1) ₹76.25 லிருந்து ₹44.75 ஐக் கழிக்க.

(5) (1)
₹76 .25
-₹44 .75
₹31. 50

- பைசாவை பைசாவிலிருந்து கழிக்க.
- ரூபாயை ரூபாயில் இருந்து கழிக்க
- இடமாற்றத்துடன் எண்களை கழிக்கும் முறையிலேயே கழிக்க.

2) ₹85.15 லிருந்து ₹25.18 ஐக் கழிக்க

(4)
₹ 85 .15
-₹ 25.18
₹ 59 .97

- பைசாவை பைசாவிலிருந்து கழிக்க.
- இடமாற்றத்துடன் எண்களைக் கழிப்பது போலவே கழிக்க.

வழிக்கணக்குகள்

1) **சல்மானிடம்** ₹97.50 **இருந்தது. அவன்** ₹85.75 **கொடுத்து ஒரு டீ-சர்ட் வாங்கினால் அவனிடமுள்ள மீதப்பணத்தை கணக்கிடுக.**

கடந்த வகுப்பில் மீதிப்பணத்தை கணக்கிடும் முறையை கற்றுக் கொண்டாய். அதனை நினைவு கூர்ந்து இக்கணக்கை செய்க.

	ரூபாய்	பைசா
சல்மானிடம் இருந்த பணம்	9 7	5 0
டீ-சர்ட்டுக்குக் கொடுத்த பணம்	8 5	7 5
மீதப்பணம் ₹	1 1	7 5

விடை ₹11.75

* ரூபாய்க்கான கட்டத்தில் ரூபாயை எழுதுக.
* பைசாவுக்கான கட்டத்தில் பைசாவை எழுதுக.
* இடமாற்றஞ்செய்து எண்களை கழிப்பதை போலவே கழிக்க.

2) **பூர்ணிமாவிடம்** ₹158.50 **பைசா உள்ளது. அவள்** ₹49.75 **கொடுத்து வளையல் வாங்கிக் கொண்டால் அவளிடம் உள்ள மீதப்பணம் எவ்வளவு?**

	ரூபாய்	பைசா
பூர்ணிமாவிடம் உள்ள பணம்	158	50
வளையல் வாங்க செலவு செய்த பணம்	49	75
மீதப்பணம்	108	75

குறிப்பு : மீதப்பணத்தை கண்டுபிடிக்க கழித்தல் செயலை செய்கின்றோம்.

பயிற்சி 10.2

I. **கழிக்க:**

1) ₹76.25
(-)₹44.50
____

2) ₹98.50
(-)₹55.50
____

© KTBS NOT TO BE REPUBLISHED

II. **அ)** ₹18.50 **ஐ** ₹25.10 **லிருந்து கழிக்க.**

____

____

____

____

ஆ) ₹30.50 **ஐ** ₹75.50 **லிருந்து கழிக்க.**

____

____

____

____

III. **கீழ்க்காணும் கணக்குகளைத் தீர்க்க.**

1) சோனியாவிடம் ₹50 உள்ளது. அவள் ₹45.50 க்கு வளையல் மற்றும் மோதிரம் வாங்கினால் அவளிடமுள்ள மீதப் பணம் எவ்வளவு? ,

சோனியாவிடம் உள்ள பணம்	₹50.00
வளையல் மற்றும் மோதிரம் வாங்கப் பயன்படுத்திய பணம்	₹45.50
சோனியாவிடம் உள்ள மீதப்பணம்	₹

2) **டேவிட்** ₹399.99 **மதிப்புள்ள ஒரு ஷூவை வாங்க விரும்பினான். அவனிடம்** ₹25.50 **மட்டுமே உள்ளது. ஷூவை வாங்க அவனுக்கு மேலும் எவ்வளவு பணம் தேவைப்படும்.**

____

____

____

____

____

NOT TO BE REPUBLISHED @KTBS

3) **இலட்சுமணன் அஞ்சலகத்தில் ₹52.50 க்கு ஸ்டாம்ப்புகள் மற்றும் போஸ்ட் கார்டுகளை வாங்கினான். இவன் ஒரு ₹100 -ஐக் கொடுத்தால், அஞ்சல் அலுவலர் லட்சுமணனுக்கு திருப்பித் தரவேண்டிய பணம் எவ்வளவு?**

4) **சௌமியாவிடம் ₹37.50 உள்ளது. அவள் ₹23.50-க்கு காய்கறிகளை வாங்கினால் அவளிடம் மீதமாகும் பணம் எவ்வளவு?**

@KTBS NOT TO BE REPUBLISHED

ஒன்றை விட அதிக பொருட்களின் மதிப்பைக் கண்டுபிடித்தல்.

படத்தில் காட்டப்பட்டுள்ள பொருளையும் விலையையும் கவனிக்க.

		
₹ 5	₹ 2	₹ 3.50

சனத் 3 சாக்லெட்டுகளை வாங்கினால், அவன் கொடுக்க வேண்டிய பணம் எவ்வளவு?

3 சாக்லெட்டுகளின் விலை என்ன? சிந்திக்க.

அவற்றின் மொத்த மதிப்பு 1 சாக்லெட்டின் விலையை விட அதிகமாகுமா? அல்லது குறையுமா? கணிதத்தின் எந்த செயலை பயன்படுத்த வேண்டும்?

ஒரு சாக்லெட்டின் விலை ₹2

இதை 3 முறை கூட்டலாமா? 2 + 2 + 2 = 6

கடந்த வகுப்பில் எண்களைத் திரும்பத் திரும்ப கூட்டுவதே பெருக்கல் என்பதை அறிந்து கொண்டாய்.

எனவே சுருக்கமாக ₹2 × 3 என எழுதலாம் அல்லவா?

நீ எண்களை பெருக்குவதை கடந்த வகுப்பில் கற்றாய். அதை நினைவு கூர்ந்து பெருக்குக.

₹2 × 3 = ₹6

எனவே சனந்த் கொடுக்க வேண்டிய பணம் ₹6

@KTBS
NOT TO BE REPUBLISHED

குறிப்பு : ஒரு பொருளின் விலையை அறிந்து, அதை விட அதிகமான அதே பொருட்களின் விலையைக் கண்டுபிடிக்கும்போது பெருக்கலைப் பயன்படுத்துகிறோம்.

2) இரவி 4 பென்சில்களை வாங்கினால், அவன் கொடுக்க வேண்டிய மொத்தப் பணம் எவ்வளவு? கணிதத்தின் எந்தச் செயலை செய்ய வேண்டும்?.

பெருக்கல்

ஒரு பென்சிலின் விலை = ₹3.50

4 பென்சில்களின் விலை = 4 × 3.50

= ₹14.00

குறிப்பு : சில்லரையுள்ள தொகையைப் பெருக்கும்போது எண்களை பெருக்குவதுபோலவே பெருக்குக. புள்ளியை பெருக்கற் பலனின் வலது பக்கத்தில் இருந்து 2 ஸ்தானங்களுக்கு பிறகு இடுக.

பயிற்சி 10.3

1) ஒரு விளையாட்டு பொருளின் விலை ₹45. அதுபோன்ற 3 விளையாட்டுப் பொருட்களின் விலை என்ன?

2) ஒரு பாக்கெட் சமையல் எண்ணெயின் விலை ₹82.50 எனில் 5 எண்ணெய் பாக்கெட்டுகளின் விலை என்ன?

3) ஒருவர் தனது அன்றாட உணவிற்காக ₹95.50 செலவு செய்கிறார். அவருடைய ஒரு வாரத்தின் உணவுச் செலவு என்ன?

4) ஒரு புத்தகத்தின் விலை ₹23.75. எனில் 5 புத்தகங்களின் விலை என்ன?

@KTBS NOT TO BE REPUBLISHED

ஒரு பொருளின் விலையைக் கண்டுபிடித்தல்.

சுரேஷ் ஒரு கடையில் 6 ரூபாயைக் கொடுத்து 3 சாக்லெட்டுகளை வாங்கினான். ஒவ்வொரு சாக்லெட்டின் விலை என்ன?

3 சாக்கெலட்டுகளின் விலை நமக்குத் தெரியும். ஒரு சாக்லெட்டின் விலையைக் கண்டுபிடிப்பது எப்படி? சிந்திக்க.

இதைக் கண்டுபிடிக்க நாம் பயன்படுத்தக் கூடிய கணித செயல் யாது? சிந்திக்க.

6 ரூபாயை 3 பாகங்களாகச் செய்யலாம்.

₹1 ₹1	₹1 ₹1	₹1 ₹1

அப்பொழுது ஒவ்வொரு பாகத்திலும் 2 ரூபாய் வருகிறது. சமமாக பிரிப்பது வகுத்தல் என்பதைக் கடந்த வகுப்பில் கற்றாய்.

எனவே 6 ரூபாயை 3 இனால் வகுக்க வேண்டும். ∴ $6 \div 3 =$ ₹2

```
3) 6 (2
   6
  ---
   0
  ---
```

குறிப்பு ஒரு பொருளின் விலையைக் கண்டுபிடிக்க வகுத்தலைப் பயன்படுத்துகிறோம். பணத்தின் வகுத்தலை எண்களின் வகுத்தலை போலவே செய்கிறோம்.

மாதிரி கணக்குகள்

1) 4 சோப்புகளின் விலை ₹20 என்றால் ஒரு சோப்பின் விலை என்ன?

விடை : 4 சோப்புகளின் விலை = ₹20

ஒரு சோப்பின் விலை $= \dfrac{\text{சோப்புகளின் மொத்த விலை}}{\text{சோப்புகளின் மொத்த எண்ணிக்கை}}$

$= \dfrac{20}{4}$

```
4) 20 (5
   20
  ----
   00
  ----
```

ஒரு சோப்பின் விலை = ₹5

@KTBS NOT TO BE REPUBLISHED

2) 5 பந்துகளின் விலை ₹50 எனில் ஒரு பந்தின் விலை என்ன?

விடை : 5 பந்துகளின் விலை = ₹50

ஒரு பந்தின் விலை = 50 ÷ 5

5) 50(10
50
00

ஒரு பந்தின் விலை = ₹10

பயிற்சி 10.4

1) 6 **பொம்மைகளின் மொத்த விலை** ₹42. **ஒரு பந்தின் விலை என்ன?**

2) 8 **நோட்டு புத்தகங்களின் விலை** ₹72. **ஒரு நோட்டு புத்தகத்தின் விலை என்ன?**

3) 4 **பென்சில்களின் விலை** ₹16. **ஒரு பென்சிலின் விலை என்ன?**

@KTBS
NOT TO BE REPUBLISHED

4) 4 **பென்சில்களின் மொத்த விலை** ₹16 **ஒரு பென்சிலின் விலை என்ன?**

____

____

____

____

விலைப்பட்டியல் மற்றும் பற்று சீட்டு (பில்)

@KTBS NOT TO BE REPUBLISHED

கடந்த வகுப்பில் விலைப்பட்டியல் மற்றும் பற்றுச்சீட்டைப் பற்றிப் அறிந்தாய். விலைப்பட்டியல், பொருட்களின் விலையை அறிந்து தேவையான பொருட்களை அக்கடையில் இருந்து வாங்க உதவும். பில் கடையில் இருந்து வாங்கிய பொருட்களின் விவரங்களை அறிய நமக்கு உதவுகிறது என்பதையும் அறிந்தாய். இவற்றை நினைவு கூர்ந்து கீழ்காண்பவற்றை பூர்த்தி செய்க.

1) கடையில் இருந்து வாங்கிய பொருட்களின் விவரங்களை பெற்றுள்ள சீட்டினை ______________ என்பார்கள்.

2) கடையில் மாட்டப்பட்டுள்ள ஒவ்வொரு பொருளின் விலையைக் குறிப்பிடும் பலகையை ______________ என்பார்கள்.

3) பற்றுச் சீட்டில் கொடுக்க வேண்டிய மொத்த பணத்தை எண்ணாலும் ____________ லும் கொடுத்திருப்பார்கள்.

கீழ்க்காணும் எடுத்துக்காட்டுகளை கவனிக்க.

எடுத்துக்காட்டு 1 : நவீன் டெக்ஸ்டைல்சில் சுமா சில உடைகளை வாங்கினாள். கடைக்காரர் கொடுத்த மாதிரி பில் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

நவீன் டெக்ஸ்டைல்ஸ் TIN : 12344456789

4, 1ம் நெடுஞ்சாலை, நாகசந்திரா, பெங்களூர்

பில் எண் : 345 **தொலைபேசி** : 23-12-2013

கொள்வோரின் பெயர் : சுமா

வ.எண்	**விவரம்**	**அளவு**	**விலை (₹)**		**மொத்தபணம்**
1	புடவை	1	470.00		470 . 00
2	ஷர்ட்	2	150.00		300.00
3	பேன்ட்	2	189.00		378.00
				வேட் வரி	1148.00 63.00
				மொத்தம்	1211.00

எழுத்தால் : ஓராயிரத்து இருநூற்று பதினொன்று மட்டும்

கையொப்பம்.

கட்டளைகளும் நிபந்தனைகளும்

- பணம் திரும்ப தரப்படமாட்டாது.
- ஒரு முறை விற்கப்பட்ட பொருட்கள் திரும்பப் பெற்றுக்கொள்ளப் படுவதில்லை.

©KTBS NOT TO BE REPUBLISHED

மேற்காணும் பில்லைப் பார்த்து அதில் உள்ள விவரங்களைப் பட்டியலிடுக.

1) கடையின் பெயர் மற்றும் விலாசம்

2) பில் எண் :

3)

4)

5)

6)

7)

நினைவில் கொள்க:

- பில் என்பது வாங்கிய பொருட்களுக்கான சாட்சியாகும்.
- இந்த பில்லைக் காட்டுவதால் கொள்வோர் வாங்கிய பொருட்களை வினியோகம் செய்யவும் பணத்தை திரும்ப பெறவும் நிபந்தனைகளுக்கு ஏற்ப பயன்படுத்தலாம்.
- கொள்வோர் தாம் வாங்கிய பொருட்களுக்கான பில்லைக் கேட்டு பெறுவது அவரது உரிமையாகும்.
- சில கடைகளில் கொள்வோருக்கு பில்லை, கம்ப்யூட்டரில் இருந்து எடுத்து கொடுப்பார்கள்.

எடுத்துக்காட்டு 2 : இரமேஷ், கோமல் காய்கறிக் கடையில் சில காய்கறிகளை வாங்கினார்கள். அதற்கான பில் ஒன்று கொடுக்கப்பட்டுள்ளது.

கோமல் காய்கறி கடை TIN : 12368943211

கமலா நகர்

பில் எண் : 613 **தேதி** : 01102013

கொள்வோரின் பெயர் : இரமேஷ்

வ.எண்	**விவரம்**	**அளவு**	**விலை (₹)**	**மொத்தபணம் (₹)**
1	பீன்ஸ்	1 **கி.கிராம்**	40 . 00	40 . 00
2	வெண்டைக்காய்	2 **கி.கிராம்**	30 . 00	60 . 00
3	பீட்ரூட்	2 **கி.கிராம்**	20 . 00	40 . 00
4	நூல்கோஸ்	1 **கி.கிராம்**	25 . 00	25 . 00
			மொத்தம்	165 . 00

வார்த்தைகளில் : ரூபாய் நூற்று அறுபத்துதைந்து மட்டும்.

கையொப்பம்.

கட்டளைகளும் நிபந்தனைகளும்

- பணம் திருப்பித் தரப்படாது.
- ஒரு முறை விற்கப்பட்ட பொருட்கள் மறுபடியும் திரும்பப் பெற்றுக் கொள்ளப்படுவதில்லை.

©KTBS NOT TO BE REPUBLISHED

மேற்காணும் பில்லின் விவரங்களை கவனிக்கவும் வாங்கிய ஒவ்வொரு பொருளின் மொத்த விலையைக் கண்டுபிடிப்பது எப்படி ? சிந்திக்க.

இரமேஷ் வாங்கிய பீன்ஸின் அளவு என்ன?

1 கி.கிராம் பீன்ஸின் விலை என்ன?

வாங்கிய பீன்ஸின் மொத்த விலை என்ன?

அளவு × விலை = மொத்தப் பணம்

1 × 40 = ₹ 40

அது போல மீதமுள்ள காய்கறிகளின் மொத்த விலையைக் கண்டுபிடிக்க.

வாங்கிய எல்லா பொருட்களின் மொத்தத்தை கண்டுபிடிப்பது எப்படி? சிந்திக்க.

©KTBS NOT TO BE REPUBLISHED

கவனிக்க :

- ஒவ்வொரு பொருளின் விலையை வாங்கிய அளவுடன் பெருக்கினால் மொத்தப் பணத்தை பெறுகிறோம்.
- வாங்கிய எல்லாப் பொருட்களின் விலையைக் கூட்டினால் மொத்த தொகையைப் பெறுகிறோம்.

எடுத்துக்காட்டு **3 :**

நீங்கள் வாங்கிய ஒவ்வொரு பொருளின் விலை மற்றும் மொத்தத்தை கண்டுபிடிப்பதை அறிவீர். கீழ்காணும் பில்லை பூர்த்தி செய்து முழுமையாக்குக.

ஜே.கே. பேக்கரி TIN : 98456284350

பேட்டை சாலை, திம்மசந்திரா

பில் எண் : 501 **தேதி** : 05-12-2013

கொள்வோர் பெயர் : பீட்டர்

ரொக்க பணத்திற்கான இரசீது.

வ எண்	விவரம்	அளவு	விலை (₹)	மொத்த பணம் (₹)
1	கேக்	2	10	-
2	சாக்லெட்	10	5	50.00
3	பன்கள்	5	5	25 . 00
4	ஐஸ்கிரீம்	10	5	50 . 00
			மொத்தம்	

வார்த்தைகளில் :

கையெழுத்து.

கட்டளைகள் மற்றும் நிபந்தனைகள்

- பணம் திருப்பி கொடுக்கப்படாது
- ஒரு முறை விற்கப்பட்ட பொருட்கள் திரும்பப் பெற்றுக்கொள்ளப்படாது.

@KTBS NOT TO BE REPUBLISHED

நீ கேஷ் பில், கிரெடிட் பில், எஸ்டிமேட் முதலியவற்றை பற்றி கேட்டிருக்கலாம்.

- **இவற்றின் பொருளையும், இவை எந்தெந்த வரிகளுக்கு உட்படுகின்றன, வரிப்பணம் முதலிய விவரங்களை உன் ஆசிரியரிடம் கேட்டறிக.**

பயிற்சி 10.5

1. **இந்த பில்லைப் பூர்த்தி செய்க.**

இரஹ்மத் மளிகை கடை : 22448567539

பசவனஹள்ளி

பில் எண் : 63 **தேதி** : 10122013

கொள்வோரின் பெயர் : உமேஷ்

வஎண்	**விவரம்**	**அளவு**	**விலை (₹)**	**மொத்த பணம் (₹)**
1	துவரம் பருப்பு	1 **கி.கிராம்**	80 . 00	
2	சர்க்கரை	2 **கி.கிராம்**	36 . 00	72 . 00
3	அரிசி	2 **கி.கிராம்**	54 . 00	108 . 00
			மொத்தம்	

வார்த்தைகளில் :

கையொப்பம்.

கட்டளைகளும் நிபந்தனைகளும்

- பணம் திருப்பித் தரப்படாது
- ஒரு முறை விற்பனையான பொருள் திரும்பப் பெற்றுக் கொள்ளப்படாது.

©KTBS NOT TO BE REPUBLISHED

2. **கீழ் காணும் விலைப்பட்டியலை கவனிக்க.**

அஹ்மத் மளிகை கடை **சந்தை வீதி, கோடிஹள்ளி** **தேதி** : 27/01/2014			
வ எண்	**விவரம்**	**அளவு**	**விலை (₹)**
1	துவரம் பருப்பு	1 **கி.கிராம்**	70. 00
2	சர்க்கரை	1**கி.கிராம்**	32.00
3	கடலை பருப்பு	1**கி.கிராம்**	60.00
4	பச்சைப் பயிறு	1**கி.கிராம்**	95.00
5	உளுத்தம் பருப்பு	1**கி.கிராம்**	70.00
6	ரவை	1**கி.கிராம்**	28.00
7	வெல்லம்	1**கி.கிராம்**	50.00
8	தனியா	1**கி.கிராம்**	120.00

©KTBS NOT TO BE REPUBLISHED

கௌரம்மா 27-1-2014 அன்று அஹ்மத் மளிகை கடையில் வாங்கிய மளிகை சாமான்களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1) கடலை பருப்பு 1 கி. கிராம்

2) துவரம் பருப்பு 2 கி.கிராம்

3) ரவை 2 கி.கிராம்

4) சர்க்கரை 1 கி.கிராம்

கடையில் உள்ள விலைப்பட்டியலை கவனித்து பில் ஒன்றை தயாரிக்க.

@KTBS
NOT TO BE REPUBLISHED

செயல்பாடு : உங்கள் வீட்டில் வாங்கிய பில்களை சேகரிக்க. அவற்றில் உள்ள விவரங்களைப் பரிசோதிக்க.

அலகு 11

அளவுகள்-நீளம்

D3C5F3

இவ்வலகைக் கற்றபின் நீ :

- நீளத்தின் அலகை அறிந்துகொள்வாய்.
- மீட்டர் மற்றும் சென்டி மீட்டர்களிடையே உள்ள தொடர்பை அறிவாய்.
- மீட்டரை சென்டி மீட்டராகவும் சென்டி மீட்டரை மீட்டராகவும் மாற்றுவாய்.
- நீளத்தைக் கூட்டுவாய்.
- நீளத்தின் வித்தியாசத்தைக் கண்டுபிடிக்கும் முறையை அறிந்துக் கொள்வாய்.
- ஒரு பொருளின் நீளம் மற்றும் இரண்டு இடங்களுக்கிடையேயுள்ள தூரத்தை தோராயமாக்குவாய்.

©KTBS NOT TO BE REPUBLISHED

நீளம்



துணிக்கடையில் துணி வாங்கும் போது உனக்கு வேண்டிய துணியை அளந்து கொடுக்க கடைக்காரர் எந்த கருவியைப் பயன்படுத்துகிறார்? நீ ரிப்பன் வாங்க கடைக்கு சென்றாலும் கடைக்காரர் அது போன்ற கருவியையே பயன்படுத்துகிறார் கடைக்காரர் அதை என்னவென்று அழைப்பார்?

அவர் பயன்படுத்திய கருவி அளவுப்பட்டியாகும். அதைக் கேட்டு வாங்கி அதன் மீது குறிக்கப்பட்டுள்ளவற்றை கவனிக்க.

அளவுப்பட்டியை மீட்டர் பட்டி என்றும் அழைப்பர். மீட்டர் பட்டியின் மாதிரி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.



அளவுப் பட்டியில் 0 இலிருந்து 15 வரையில் எத்தனை சமக்குறிப்புகள் உள்ளன எண்ணுக. ஒரு எண்ணிலிருந்து இன்னொரு எண்ணுக்கு இடையே உள்ள தூரம் 1 செ.மீ.ஆக உள்ளது. இது போல 100 சென்டி மீட்டர் அளவுப் பட்டியை மீட்டர்பட்டி என்று அழைப்பார்கள்.

1 மீட்டர் = 100 சென்டி மீட்டர்.

கவனி :

சென்டிமீட்டரை செ.மீ. என்றும் மீட்டரை மீ என்றும் குறிப்பிடுவர் .

செயல்பாடு : நீ ஒரு டெய்லர் கடைக்கு சென்று டெய்லர் பயன்படுத்தும் அளவுப்பட்டியைக் கேட்டு வாங்கி அதன் இரண்டு பக்கங்களிலும் குறிப்பிட்டுள்ளதை கவனிக்க. மீட்டர் பட்டியுடன் ஒப்பிட்டு பார்க்க. வித்தியாசம் இருந்தால் உன் ஆசிரியருடன் கலந்துரையாடுக.

அன்றாட வாழ்க்கையில் எந்தெந்த சூழ்நிலைகளில் மீட்டர் அளவுப்பட்டியைப் பயன்படுத்துகிறார்கள்? சிலவற்றைப் பட்டியலிடுக.

1) ....

2) ....

3) ....

4) ....

@KTBS NOT TO BE REPUBLISHED

மீட்டரை சென்டிமீட்டராக மாற்றுதல்

செயல்பாடு :

1மீட்டர் 100 சென்டிமீட்டருக்கு சமம் என்பது உங்களுக்குத் தெரியும். 100 செ.மீ நீளமுள்ள இரண்டு நூல் துண்டுகளை எடுத்துக்கொள்க. இரண்டையும் இணைக்க. நூலின் மொத்த நீளத்தை மீட்டர் பட்டியைப் பயன்படுத்திக் கண்டுபிடி. உங்கள் விடை என்ன? இது போல் 100 செ.மீ நீளமுடைய மூன்று நூல்களை எடுத்து கொண்டு மூன்றையும் இணைக்க. மொத்த நீளத்தைக் கண்டுபிடிக்க. உன் விடை என்ன? இதன் மூலம் நீ அறிவது என்ன?

அதாவது 200 செ.மீ 2 மீ க்கு சமம்.

300செ.மீ 3 மீ க்கு சமம்.

NOT TO BE REPUBLISHED @KTBS

கீழ்காணும் எடுத்துகாட்டுளைக் கவனிக்க.

1 மீ = 100 செ. மீ

2 மீ = 2 × 100 செ. மீ = 200 செ. மீ

3 மீ = 3 × 100 செ. மீ = 300 செ. மீ

அப்படியே, 4 மீ = 4 × 100 செ. மீ = 400 செ. மீ

குறிப்பு :

மீட்டரை சென்டிமீட்டராக மாற்ற 100 ஆல் பெருக்க வேண்டும்

மாதிரி கணக்கு

1) 5 மீட்டரை சென்டி மீட்டராக மாற்றுக

1 மீட்டர் = 100 செ.மீ

5 மீட்டர் = 5 × 100 செ. மீ

=500செ. மீ

மாதிரி

I. **கீழ்காணும் அளவுகளை சென்டிமீட்டராக மாற்றுக.**

1) 9 மீ

2) 12 மீ

3) 14 மீ

4) 10 மீ

5) 20 மீ

6) 33 மீ

@KTBS
NOT TO BE REPUBLISHED

II. **விடுப்பட்ட இடங்களை சரியான விடையைக் கொண்டு நிரப்புக.**

1) 6 மீ = ... செ. மீ

2) 11 மீ = ... செ. மீ

3) 39 மீ = ... செ. மீ

4) 12 மீ 16 செ. மீ = ... செ. மீ

5) 4 மீ 70 செ. மீ = ... செ. மீ

III. `A' பட்டியலில் அளவுகள் மீட்டர்களிலும் `B' •பட்டியலில் உள்ள அளவுகள் சென்டிமீட்டர்களிலும் கொடுக்கப்பட்டுள்ளன `A' பட்டியலுக்கு ஏற்ப `B' பட்டியலைப் பொருத்துக.

A	B	
1) 4 மீ	a) 705 செ. மீ	________
2) 7 மீ	b) 450 செ. மீ	________
3) 7 மீ 20 செ. மீ	c) 700 செ. மீ	________
4) 4 மீ 50 செ. மீ	d) 720 செ. மீ	________
	e) 400 செ. மீ	________

NOT TO BE REPUBLISHED ©KTBS

சென்டிமீட்டரை மீட்டராக மாற்றுதல்

100 செ.மீ=1 மீ என்பது உங்களுக்குத் தெரியும். 200 செ.மீ இல் 100 செ.மீ அளவுள்ள எத்தனை சமபாகங்கள் உண்டாகின்றன? அப்படியே 300 செ. மீ இல், 100 செ.மீ அளவுள்ள எத்தனை சமபாகங்கள் உண்டாகின்றன? சிந்தித்துப்பார்க்க.

200 செ. மீ = 100 செ. மீ + 100 செ. மீ
= 1 மீ + 1 மீ
= 2 மீ

அதுபோல, 300 செ. மீ = 100 செ. மீ + 100 செ. மீ + 100 செ. மீ
= 1 மீ + 1 மீ + 1 மீ
= 3 மீ

இதை சுலபமாக இப்படி எழுதலாம்

200 செ. மீ = $\frac{200}{100}$ = **2** மீ

300 செ. மீ = $\frac{300}{100}$ = **3** மீ

குறிப்பு : சென்டிமீட்டரை மீட்டராக மாற்றும் போது 100 ஆல் வகுக்க வேண்டும்.

மாதிரி கணக்கு :

500 செ. மீ ஐ மீட்டராக மாற்றுக

500 செ. மீ $= \frac{500}{100} =$ 5 மீ

100 செ.மீ = 1 மீ

பயிற்சி 11.2

I. **கீழ்காணும் அளவுகளை மீட்டர்களாக மாற்றுக.**

1) 800 செ.மீ

2) 900 செ.மீ

3) 600 செ.மீ

4) 1000 செ.மீ

5) 3000 செ.மீ

6) 300 செ.மீ

II. **விடுப்பட்ட இடங்களை சரியான விடையைக் கொண்டு நிரப்புக.**

1) 400செ.மீ = ... மீ
2) 900செ.மீ = ... மீ
3) 875 செ.மீ = ... மீ .... மீ
4) 750 செ.மீ = ... மீ .... மீ

III. **சரி அல்லது தவறு என எழுதுக.**

1) 20 மீ = 1000 செ.மீ ☐ 2) 5 மீ = 500 செ.மீ ☐

3) 150 செ.மீ = $1\frac{1}{2}$ மீ ☐ 4) 750 செ.மீ = 75மீ ☐

@KTBS NOT TO BE REPUBLISHED

நீளங்களின் கூட்டல்

எண்களை கூட்டுவது பற்றி கடந்த வகுப்பில் கற்றாய். எண்களைக் கூட்டும் போது ஸ்தான மதிப்பிற்கேற்ப எப்படி கூட்டுவாயோ அதுபோலவே நீளத்தையும் கூட்ட வேண்டும்.

கீழ்க்காணும் படத்தைக் கவனிக்க.

செயல்பாடு : இராதா 5 மீ நீளமுள்ள ஒரு நூலைப் பயன்படுத்தி ஒரு விளையாட்டு தொலைப்பேசியை செய்திருக்கிறாள். ரீட்டா 12 மீ நீளமுள்ள நூலைப் பயன்படுத்தி விளையாட்டு தொலைபேசியை செய்திருக்கிறாள். அவர்கள் இருவரும் பயன்படுத்திய நூலின் மொத்த நீளம் எவ்வளவு?

இராதாவும் ரீட்டாவும் பயன்படுத்திய நூலின் மொத்தம் எண்களாக இருப்பதால் எண்களைப் போலவே இரண்டு அளவுகளையும் கூட்ட வேண்டும்.

இராதா பயன்படுத்திய நூலின் நீளம் = 5 மீ

ரீட்டா பயன்படுத்திய நூலின் நீளம் = 12 மீ

மொத்தம் = 17 மீ

செயல்பாடு:

இரஹீம் தனது பள்ளியின் சுதந்திர தின விழாவுக்காக 15 மீ 40 செ.மீ நீளமுள்ள வெள்ளை நிற ரிப்பன் மற்றும் 12 மீ 35 செ.மீ நீளமுள்ள பச்சை நிற ரிப்பனைப் பயன்படுத்தியுள்ளான். அவர்கள் பயன்படுத்திய மொத்த ரிப்பனின் நீளம் என்ன?

@KTBS NOT TO BE REPUBLISHED

குறிப்பு

இங்கு, இரண்டு நிற ரிப்பன்களின் நீளங்கள் மீ மற்றும் செ.மீகளில் கொடுக்கப்பட்டுள்ளன. மொத்த நீளத்தைக் கண்டுபிடிக்கும் போது மீட்டரை மீட்டருடனும், சென்டிமீட்டரை சென்டி மீட்டருடனும் கூட்டுக.

அதுபோல

காவி நிற ரிப்பனின் நீளம்	=	15 மீ 40 செ.மீ
பச்சை நிற ரிப்பனின் நீளம்	=	12 மீ 35 செ.மீ
மொத்த ரிப்பனின் நீளம்	=	27 மீ 75செ.மீ

இரஹீம் பயன்படுத்திய ரிப்பனின் மொத்த நீளம் 27 செ.மீ. 75 செ.மீ

பயிற்சி 11.3

I. **கீழ்க்காணும் அளவுகளைக் கூட்டுக.**

1) 150 மீ
 75 மீ

2) 137 மீ
 112 மீ

3) 250 மீ
 114மீ

4) 450மீ
 9 மீ

5) 25 மீ
 163 மீ

6) 80 மீ
 146 மீ

7) 22 மீ10 செ.மீ
 14மீ 6 செ.மீ

8) 20 மீ 12 செ.மீ
 13 மீ 60 செ.மீ

9) 73 மீ 47 செ.மீ
 35 மீ 18 செ.மீ

10) 25 மீ 46 செ.மீ
 5 மீ 28 செ.மீ

@KTBS
NOT TO BE REPUBLISHED

II. **கீழ்காணும் வழிக்கணக்குகளைத் தீர்க்க.**

1) ப்ரீதியிடம் 18 மீ சிவப்பு ரிப்பனும் 15 மீ நீல ரிப்பனும் உள்ளது. அவளிடமுள்ள ரிப்பனின் மொத்த நீளம் என்ன?

2) அசாத் 800 மீ தொலைவை ரிக்ஷாவிலும் 50மீ தொலைவை நடந்தும் பள்ளிக்குச் செல்கிறான். அவன் கடந்த மொத்த தூரம் எவ்வளவு?

@KTBS NOT TO BE REPUBLISHED

3) மேரியிடம் 10 மீ வெள்ளை நிற நூல் மற்றும் 18 மீ 40 செ.மீ கருப்பு நூல் உள்ளது. மேரியிடமுள்ள நூலின் மொத்த நீளம் என்ன ?

4) கடைக்காரன், காலையில் 50 மீ 20 செ.மீ, மதியம் 60மீ, 40 செ.மீ மற்றும் மாலையில் 5 மீ 30 செ.மீ நீளமுள்ள கம்பிகளை விற்கிறான். அவன் விற்ற கம்பியின் மொத்த நீளம் என்ன ?

5) படத்தை கவனித்து விடுப்பட்ட இடங்களை நிரப்புக.



1 ஆம் மரத்திலிருந்து 2ஆம் மரத்திற்கு இடையேயுள்ள தூரம்............

1 ஆம் மரத்திலிருந்து 3ஆம் மரத்திற்கு இடையேயுள்ள தூரம் ....

1 ஆம் மரத்திலிருந்து 4ஆம் மரத்திற்கு இடையேயுள்ள தூரம்.............

நீளங்களைக் கழித்தல்

செயல்பாடு : 80 செ.மீ நீளமுள்ள கயிறு ஒன்றை எடுத்துக்கொள்க. அதில் 30 செ.மீ நீளமுள்ள கயிற்றைக் கத்தரித்து. மீதமுள்ள நீளத்தை அளவு பட்டியைப் பயன்படுத்தி அளந்து பார்க்க. உனக்கு கிடைத்த விடை என்ன?. மீதமுள்ள கயிற்றில் நீளத்ததை, அளந்து பார்க்காமலேயே எப்படி கண்டுபிடிக்கலாம்.

மேற்காணும் எடுத்துகக்காட்டில் பயன்படுத்தும் அடிப்படை கணிதச் செயல் கழித்தலாகும்.

NOT TO BE REPUBLISHED @KTBS

முன்பக்கத்திலுள்ள படத்தை கவனிக்க.

இரஜினி 45 செ.மீ நீளமுள்ள நூலில் மணிகளைக் கோர்க்க வேண்டியுள்ளது. இதுவரை 32செ.மீ நீளம் வரையிலும் நூலில் மணியை கோர்த்திருக்கிறாள். மணி கோர்க்கபடாத நூலின் அளவு என்ன? கண்டுபிடிக்க.

கோர்க்கபட வேண்டிய மற்றும் கோர்க்கப்படாமல் இருக்கும் நூலின் அளவுகள் சென்டிமீட்டரில் உள்ளன. எண்களைக் கழிக்கும் முறையையே பயன்படுத்தி நீளங்களைக் கழிக்க வேண்டும்.

நூலின் மொத்த நீளம்	= 45 செ.மீ
மணி கோர்க்கப்பட்டுள்ள நூலின் நீளம்	= 32 செ.மீ
மீதியுள்ள நூலின் நீளம்	= 13 செ.மீ

இப்படத்தில் கௌரி 5மீ 50 செ.மீ நீளமுள்ள சுவற்றின் மீது நாட்டுப்புறத்தை பிரிதிபலிக்கும் படம் ஒன்றை வரைந்துக் கொண்டிருக்கிறாள். முதல் நாள் 2மீ. 20செ.மீ நீளமுள்ள படத்தை வரைந்தாள். படம் வரையப்பட வேண்டிய மீதமுள்ள சுவற்றின் நீளத்தை எப்படிக் கண்டுபிடிக்கலாம்? சிந்திக்க. இங்கு நீளமானது மீட்டர் மற்றும் சென்டிமீட்டர்களில் உள்ளது. சுவற்றின் மீதமுள்ள நீளத்தைக் கண்டுபிடிக்கும் போது மீட்டரிலிருந்து மீட்டரை மற்றும் சென்டி மீட்டரிலிருந்து சென்டிமீட்டரைக்கழிக்க வேண்டும். அதுபோல

சுவற்றின் நீளம்	= 5 மீ 50 செ.மீ
படம் வரையப்பட்டுள்ள சுவற்றின் நீளம்	= 2 மீ 20 செ.மீ
படம் வரையப்படவேண்டிய சுவற்றின் நீளம்	= 3 மீ 30 செ.மீ

© KTBS NOT TO BE REPUBLISHED

பயிற்சி 11. 4

I. கீழ்காண்பனவற்றில், மேலுள்ள அளவுகளிலிருந்து கீழுள்ள அளவுகளைக் கழிக்க.

1) 86 செ.மீ - 29 செ.மீ	2) 94 செ.மீ -88 செ.மீ	3) 560 செ.மீ - 410 செ.மீ	4) 269 செ.மீ -100 செ.மீ
5) 9 மீ 90 செ.மீ -5 மீ 60 செ.மீ	6) 86 மீ 70 செ.மீ -68 மீ 65 செ.மீ	7) 97 மீ 44 செ.மீ -54 மீ 32 செ.மீ	
8) 171 மீ 82 செ.மீ -145 மீ 70 செ.மீ	9) 224 மீ 83 செ.மீ -165 மீ 75 செ.மீ	10) 267 மீ 87 செ.மீ -167 மீ 85 செ.மீ	

II. பின்வரும் கணக்குளுக்குத் தீர்வு காண்க.

1) ஒரு நூற்சுருளில் 450மீ நூல் உள்ளது. கடைக்காரன் இதிலிருந்து 170 மீ நீளமுள்ள நூலை விற்றால் சுருளில் மீதமுள்ள நூலின் நீளம் என்ன?

2) அஹ்மது ஒரு சிறிய தோட்டத்திற்கு வேலி போட 217மீ 70செ.மீ நீளமுள்ள முள்கம்பியை வாங்குகிறார். அதைக்கொண்டு வேலியைப் போட 190மீ 40செ.மீ கம்பியைப் பயன்படுத்தினால் அவரிடம் மீதமுள்ள கம்பியின் நீளம் என்ன ?

@KTBS NOT TO BE REPUBLISHED

3) ஒரு தானிலுள்ள துணியின் நீளம் 125மீ 80 செ.மீ. இதிலிருந்து 70மீ 30செ.மீ துணியை கத்திரித்து விட்டால் தானில் மீதமிருக்கும் துணியின் நீளம் என்ன?

4) குன்று ஏறுபவன், முதல் நிலையில் 475 மீ 60மீ மற்றும் இரண்டாம் நிலையில் 300 மீ 40 செ.மீ உயரம் வரை ஏறுகிறான். அவன் முதல் நிலையை விட இரண்டாம் நிலையில் குறைவாக ஏறிய உயரம் என்ன ?

©KTBS NOT TO BE REPUBLISHED

5) கூட்ஸ் இரயிலின் நீளம் 242 மீ 60 செ. மீ. இரயிலின் பயணிகள் பயணம் செய்யும் நீளம் 109மீ 25செ.மீ எனில் எந்த இரயிலின் நீளம் அதிகம்? எவ்வளவு அதிகம்?

உங்களுக்கு இது அறிந்துக் கொள்க

$\frac{1}{4}$ மீட்டர் (மீ) = 25 சென்டி மீட்டர் (செ.மீ)

$\frac{1}{2}$ மீட்டர் (மீ) = 50 சென்டி மீட்டர்(செ.மீ)

$\frac{3}{4}$ மீட்டர் (மீ) = 75 சென்டி மீட்டர்(செ.மீ)

1 மீட்டர் (மீ) = 100 சென்டி மீட்டர் (செ.மீ)

சரியான அளவுகளைப் பயன்படுத்துதல்.

செயல்பாடு : உன் வகுப்பறையிள் நீளத்தை, நீ பயன்படுத்தும் வடிவியல் பெட்டியிலிருக்கும் அளவு பட்டியைக் கொண்டு அளந்து எழுதுக.

பிறகு அதே நீளத்தை மீட்டர் பட்டியைப் பயன்படுத்தி அளந்து எழுதுக.

எந்த சூழ்நிலையிலும் நீளத்தை அளப்பதும் குறிப்பிடுவதும் சுலபமாக இருந்தது? சிந்திக்க.

அழிப்பானின் நீளம், பென்சிலின் நீளம், குண்டுசியின் நீளம் இவற்றை மீட்டரில் குறிப்பிடுவது கடினமல்லவா? அப்படியென்றால் இவற்றை எந்த அளவையைப் பயன்படுத்தி குறிப்பிடுவது சுலபம்?

மேற்காணும் எல்லாப் பொருட்களின் நீளத்தை சென்டிமீட்டரில் கூறுவது சுலபமும் வழக்கமுமாகும். அப்படியே கரும்பலகையின் ஒரு பக்கத்தின் நீளம், அறையின் நீளம்,அகலம், உயரம், விளையாட்டு மைதானத்தின் நீளம் மற்றும் அகலம் இவற்றை மீட்டரில் குறிப்பிடுவது சுலபமும் வழக்கமுமாகும்.

செயல்பாடு : உங்கள் விளையாட்டு மைதானத்தின் நீளம், அகலம், இவற்றைக் கணக்கிட மீட்டரைத் தவிர வேறு அலகினைப் பயன்படுத்தி குறிப்பிட முடியுமா? உங்கள் ஆசிரியருடன் கலந்துரையாடி அறிக.

இரண்டு இடங்களுக்கிடையேயுள்ள தொலைவு : எடுத்துக்காட்டு. கோலாரிலிருந்து பெங்களூர் வரையுள்ள தொலைவு பெங்களூரிருந்து மங்களூர் வரையுள்ள தொலைவு -இவ்வளவுகளை சென்டிமீட்டர் அல்லது மீட்டரில் குறிப்பிட முடியுமா? சிந்திக்க

ஒரு ஊரிலிருந்து இன்னொரு ஊருக்கிடையே உள்ள தொலைவு கிலோமீட்டர்களில் குறிப்பிடப்படுகிறது. கிலோமீட்டரை கி.மீ என்று குறிப்பிடுகிறோம்.

1 கிலோ மீட்டர் (km) = 1000 மீட்டர்(m)

©KTBS NOT TO BE REPUBLISHED

கீழ்காணும் அறிவிப்புப் பலகையைக் கவனிக்கவும். அது என்ன குறிப்பிடுகிறது?



படத்திலுள்ள அறிவிப்புப் பலகையை கவனிக்க. அது என்ன குறிப்பிடுகிறது? சிந்திக்க

ஶ்ரீனிவாசபுரத்திலிருந்து பெங்களூருக்கிடையேயுள்ள தொலைவு ....

ஶ்ரீனிவாசபுரத்திலிருந்து முள்பாகிலுக்கிடையேயுள்ள தொலைவு ....

செயல்பாடு : சாலை ஓரங்களில், தொலைவை குறிப்பிடுவதற்காக போடப்பட்டுள்ள கிலோமீட்டர் அறிவிப்புக் கற்களைக் கவனிக்க. அதிலிருந்து என்ன அறிகிறாய்? உன் ஊரிலிருந்து சுற்றும் முற்றுமுள்ள ஊர்களுக்கிடையேயுள்ள தொலைவைப் பட்டியலிடுக. எந்த ஊரின் தொலைவு அதிகம் மற்றும் எந்த ஊரின் தொலைவு குறைவு என்று கேட்டறிக.

உனக்கிது தெரிந்திருக்கட்டும்

1 கிலோமீட்டர் (கி.மீ) = 1000 மீட்டர் (மீ)

$\frac{1}{4}$ கிலோமீட்டர் (கி.மீ) = 250 மீட்டர் (மீ)

$\frac{1}{2}$ கிலோமீட்டர் (கி.மீ) = 500 மீட்டர்(மீ)

$\frac{3}{4}$ கிலோமீட்டர் (கி.மீ) = 750 மீட்டர் (மீ)

@KTBS NOT TO BE REPUBLISHED

நீளங்களைத் தோராயமாக்குதல்

அன்றாட வாழ்க்கையில் அநேக சூழ்நிலைகளில், நீளத்தை சரியாகக் கூறாமல் அதை சற்று அதிகமாகவோ அல்லது குறைவாகவோ கூறுவதை கவனித்திருப்பீர்கள்

உன் வீட்டிலிருந்து பள்ளிக்கு இடையேயுள்ள தூரம் எவ்வளவு? உன் ஊரின் பஸ் நிலையத்திலிருந்து மருத்துவமனைக்கு இடையேயுள்ள தூரம் என்ன? இவ்வினாக்களுக்கு தொலைவை அளக்காமலேயே விடையளிக்க முடியுமா? முயற்சி செய்க.

இவ்வளவுகளை சரியாகக்கூற முடியாத காரணத்தினால் தோராயமாகக் கூறுகிறோம்.

அளவைத் தோராயமாக்கிக் குறிப்பிடும் சூழ்நிலைகள் சிலவற்றைப் பட்டியலிடுக.

1) ....
2) ....
3) ....
4) ....

மேற்காணும் சூழ்நிலைகளைக் கவனிக்க. அவற்றின் நீளம் மற்றும் அகலங்களை அளவு பட்டியைப்பயன்படுத்தாமலேயே தோராயமாகக் கூற முடியுமா? சிந்திக்க

பயிற்சி 11.5

I. **தோராயமான விடைகளினால் விடுபட்ட இடங்களை நிரப்புக.**
உன் வீட்டிலிருந்து அல்லது ஊரிலிருந்து

i) அஞ்சல் நிலையத்திற்கு உள்ள தொலைவு ....

ii) அரசு மருத்துவமனைக்கு உள்ள தொலைவு ....

iii) பெங்களூருக்கு உள்ள தொலைவு ....

@KTBS
NOT TO BE REPUBLISHED

IV. **அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ள பொருளின்/இடங்களின் தொலைவை ஏற்ற அலகுகளைப் பயன்படுத்தித் தோராயமாக்கி எழுதுக.**

வ. எண்	பொருள்	சென்டிமீட்டர் (செ.மீ)	மீட்டர் (மீ)	கிலோமீட்டர் (கி.மீ)
1)	பென்சிலின் நீளம்			
2)	உன் வகுப்பறையின் சுவற்றின் நீளம்			
3)	உன் கணிதப் புத்தகத்தின் ஒரு பக்கத்தின் நீளம்			
4)	உன் ஊரிலிருந்து பக்கத்து ஊருக்கு இடையேயுள்ள தொலைவு			
5)	உன் வகுப்பறையிலிருந்து சமையலறைக்கு இடையேயுள்ள தொலைவு			

✿ ✿ ✿ ✿ ✿

@KTBS NOT TO BE REPUBLISHED

N8T1S3

அலகு-12 அளவுகள் (எடை)

இவ்வலகை கற்றபின் நீ

- வெவ்வேறு எடைகளின் அளவுகளைக் குறிப்பிடுவாய்
- தராசைப் பயன்படுத்தும் முறையை அறிவாய்
- எடையின் வெவ்வேறு அலகுகளை அறிவாய்
- கி.கிராம்களை கிராமாக மாற்றுவாய்
- எடையின் அளவுகளைக் கூட்டுவாய் மற்றும் கழிப்பாய்
- எடையின் சரியான அளவு மற்றும் தோராய அளவைக் கண்டுபிடிக்கும் முறையை அறிவாய்.

@KTBS NOT TO BE REPUBLISHED

எடை

இங்கு கொடுக்கப்பட்டுள்ள படங்களைக் கவனிக்க.

இப்படங்களில் என்ன பார்க்கிறாய்?

எடைபோடும் வெவ்வேறு சூழ்நிலைகள் மற்றும் வெவ்வேறு முறைகளைப் பற்றி அறிந்துள்ளாய் அல்லவா?

அன்றாட வாழ்க்கையில் எடைபோடும் சூழ்நிலைகளைப் பட்டியலிடுக.

1) ....

2) ....

3) ....

4) ....

எடைபோட எதைப் பயன்படுத்துகிறோம் மற்றும் எந்த அலகைப் பயன்படுத்தி எடையைக் குறிப்பிடுகிறோம்? சிந்திக்க.

பொதுவாக காய்கறிகளை எடைபோடும் இயந்திரத்தை கவனித்திருக்கிறாயா?

அதுதான் தராசு.

தராசின் இருபக்கங்களையும் கவனி.

அதன் இடது புறத்திலும் வலதுபுறத்திலும் என்ன வைக்கிறார்கள்?

எடைகற்களை தராசின் இடது பக்கத்திலும் எடை போடவேண்டிய பொருட்களை வலது பக்கத்திலும் வைப்பர்.

படத்திலுள்ள எடைக்கற்களை கவனிக்க. அதன் மீது என்ன எழுதப்பட்டுள்ளது.

இங்கு எத்தனை வகை எடைக்கற்கள் உள்ளன? கவனி.

அவற்றில் வேறுபாடுகள் ஏதேனும் உள்ளனவா? சில கற்களின் மீது கிராம் என்றும் சிலவற்றின் மீது கி.கிராம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்மூலம் என்ன அறிவாய்? உன் முடிவு என்ன?

ஒரு பொருளின் எடையயை கிலோகிராம் (கி.கிராம்) மற்றும் கிராம்களில் அளக்கிறோம்.

கிலோகிராம்-ஐ கி.கி. என்று எழுதுகிறோம்.

@KPBS NOT TO BE REPUBLISHED

செயல்பாடு : உன்பள்ளியில் ஒரு நாளுக்கான மதிய உணவிற்காக அரிசி மற்றும் பருப்பின் அளவை உன் ஆசிரியரிடமிருந்து கேட்டு அறிந்துக் கொள்க. அவற்றின் எடைகள் கிராம் மற்றும் கி.கிராம்களில் உள்ளன என்பதைக் கவனிக்க.

அளவுகளை கி.கிராம் மற்றும் கிராம்களில் அளந்து கூறும் பொருட்கள் சிலவற்றை நினைவு கூறுங்கள். கி.கிராம் மற்றும் கிராம்களைக் கொண்டு எடை போடும் இரண்டு பொருட்களை எழுதுக.

1) கிராம்களில் எடைபோடும் பொருட்கள் : ______ ______ ______

2) கி.கிராம்களில் எடை போடும் பொருட்கள் : ______ ______ ______

செயல்பாடு : எடைக்கற்களைப் பயன்படுத்தாமலேயே எடை போடும் முறையை கவனித்துள்ளாயா? அங்கு பயன்படுத்தப்படும் எளிய இயந்திரம் யாது? அதன் பெயர் என்ன? உன் ஆசிரியருடன் கலந்துரையாடுக.

@KTBS NOT TO BE REPUBLISHED

இந்த முறையில் எடைபோடும் சூழ்நிலைகள் சிலவற்றைப் பட்டியலிடுக.

எடையை கி,கிராம் மற்றும் கிராம்களில் குறிப்பிடுவர் என்பது உனக்குத் தெரியும். இரண்டு வகையான அலகுளைப் பயன்படுத்தி எடையைக் குறிப்பிடுவதற்கான காரணம் என்ன? உனக்குத் தெரியுமா?

பொதுவாக, பொருட்களின் அளவு குறைவாக இருந்தால் கிராம்களிலும் அதிகமாக இருந்தால் கி.கிராம்களிலும் குறிப்பிடுகிறோம்.

கவனிக்க: கடைகளில் பொருட்களை அளக்க எலெக்ட்ரானிக் இயந்திரங்களைப் பயன்படுத்துகிறார்கள். இது எடையை கிராம் மற்றும் கி.கிராம்களில் காட்டுகிறது.

ஒரு கிலோ கிராம் எத்தனை கிராம்களுக்கு சமம்?



எடை போடப் பயன்படுத்தும் எடைக் கற்களைப் பற்றிய விவரம் உங்களுக்கு முன்பே தெரியும்.

உன் பள்ளியிலிருக்கும் தராசையும் எடைக்கற்களையும் எடுத்துக் கொள். தராசின் இடது பக்கத்தில் 1 கி.கிராம் எடைக்கல்லை வைக்க. தராசின் வலது பக்கத்தில் கிராம்கள் குறிப்பிடப்பட்டுள்ள எடைக்கற்களை வைக்க. முன்பு குறிப்பிட்டது போல முயற்சி செய்க.

கொடுக்கப்பட்டுள்ள விடுப்பட்ட இடங்களில் ஆம்/ இல்லை என்று எழுதுக.

முதலில் 500 கிராம் எடைக்கல்லை வைக்க. தராசின் இரு பக்கங்களிலும் எடை சமமாக உள்ளதா?.......................

பிறகு 200 கிராம் எடைக்கல்லை சேர்த்து எடைப் போடுக, எடை சமமாக உள்ளதா?.....................

பிறகு 200 கிராம் எடைக்கல்லைச் சேர்த்து எடைப் போடுக எடை சமமாக உள்ளதா?....................

பிறகு 100 கிராம் எடைக்கல்லைச் சேர்த்து எடைப் போடுக, எடை சமமாக உள்ளதா?....................

இப்போது தராசின் இரு பக்கங்களிலும் எடை சமமாக இருப்பதை கவனித்தாயல்லவா?

வலது பக்கத்தில் நீ வைத்த எடைக்கற்களின் மொத்த எடை எவ்வளவு? கண்டுபிடி. எப்படி கண்டுபிடிப்பாய்?

எண்களைக் கூட்டுவதை நீ அறிவாய். அதுபோல எல்லாக் கற்களின் மீது குறிப்பிடப்பட்டுள்ள எடையைக் கூட்டுக. உன் விடை என்ன?

500 கிராம் + 200 கிராம் + 200 கிராம் + 100 கிராம் = 1000 கிராம்.

அதாவது 1000 கிராம். இதன் மூலம் என்ன அறிந்தாய்? உன் முடிவு என்ன?

1 கிலோகிராம் = 1000 கிராம்

© KTBS NOT TO BE REPUBLISHED

கிலோ கிராம்களை கிராம்களாக மாற்றுதல்.

1 கி.கிராம் 1000 கிராம்களுக்கு சமம் என்று அறிந்து கொண்டாய்.

2 கி.கிராம் எத்தனை கிராம்களுக்கு சமம்? எப்படி கண்டுபிடிப்பாய்?

1 கி கிராம் ஐ இருமுறை கூட்டினால் 2 கி.கிராம்கள் ஆகும்.

அது போல 2 கி.கிராம் = 1 கி.கிராம் + 1 கி.கிராம்

= 1000 கிராம் + 1000 கிராம்

= 2000 கிராம்

அப்படியே 3 கி.கிராம் = 1 கி.கிராம் + 1 கி.கிராம் + 1 கி.கிராம்

= 1000 கிராம் + 1000 கிராம் + 1000 கிராம்

= 3000 கிராம்.

சுலபமாக இந்த முறையிலும் எழுதலாம்.

3 கி.கிராம் = 3×1000 கிராம்

= 3000 கிராம்.

கி.கிராம் ஐ கிராமாக மாற்ற 1000-ஐக் கொண்டு பெருக்குக.

கி.கிராம் மற்றும் கிராம் இரண்டும் இருக்கும் போது கிராமாக மாற்றுதல்

@KTBS NOT TO BE REPUBLISHED

சுனில் மற்றும் டேவிட் இருவரும் நண்பர்கள். கடைக்காரரிடம் சர்க்கரையை வாங்க படத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது போல பேசிக்கொண்டனர்.

இவ்விருவருடைய வாக்கியம் சரியா? பரிசோதித்துப் பார்க்க.

சுனிலிடம் இருக்கும் சர்க்கரையின் அளவு என்ன?

1 கி.கிராம் 200 கிராம்

1 கி.கிராம் 1000 கிராம்களுக்கு சமம் என்பது உங்களுக்குத் தெரியும். அப்படியென்றால் அவனிடம் 1000 கிராம் மற்றும் 200 கிராம் சர்க்கரை உள்ளது.

அவனிடமுள்ள மொத்த சர்க்கரையின் அளவு என்ன? எப்படி கண்டுபிடிப்பாய்.

எண்களைக் கூட்டும் முறையிலேயே 1000 கிராம் மற்றும் 200 கிராம்களைக் கூட்டுக. உன் விடை என்ன?

1200 கிராம்களல்லவா.

இதன் மூலம் என்ன தெரிந்து கொண்டாய்? உன் முடிவு என்ன?

இருவரிடமும் ஒரே அளவு சர்க்கரை உள்ளது மற்றும் 1 கி.கிராம் 200 கிராம், 1200 கிராம்களுக்கு சமமாகும்.

அதுபோல 3 கி.கிராம். 500 கிராம் எத்தனை கிராம்களுக்கு சமம்?

3 கி.கிராம் 500 கிராம் = 1 கி.கிராம் + 1 கி.கிராம் + 1 கி.கிராம் + 500 கிராம்.

= 1000 கிராம் + 1000 கிராம் + 1000 கிராம் + 500 கிராம்

= 3500 கிராம்

இதை சுலபமாக இப்படி மாற்றலாம்

3 கி.கிராம்	= 3 × 1000 கிராம்
	= 3000 கிராம்
3 கி.கிராம் 500 கிராம்	= 3 கி.கிராம் + 500 கிராம்
	= 3000 கிராம் + 500 கிராம்
	= 3500 கிராம்.

© KTBS NOT TO BE REPUBLISHED

பயிற்சி 12.1

1) 8 கி.கிராமை கிராம்களாக மாற்றுக.

2) 9 கி.கிராமை கிராம்களாக மாற்றுக.

3) 4 கி.கிராம் 600 கிராமை கிராம்களாக மாற்றுக.

4) 7 கி.கிராம் 850 கிராமை கிராம்களாக மாற்றுக.

@KTBS
NOT TO BE REPUBLISHED

எடைகளின் கூட்டல்..

படத்தைக் கவனிக்க. காய்கறி விற்பவரிடம் 9 கி.கிராம் 450 கிராம் உருளைக்கிழங்கு, 10 கி.கிராம் 300 கிராம் வெங்காயம் 12 கி.கிராம் 200 கிராம் கேரட் உள்ளது. அவரிடமுள்ள மொத்த காய்கறிகளின் எடை என்ன? கண்டுபிடிப்பது எப்படி?

காய்கறிகளின் எடையை கி.கிராம் மற்றும் கிராம்களில் குறிப்பிடப்படுவதை கவனிக்க. இப்பொழுது எடைகளை எப்படி கூட்டுவாய்? கி.கிராம்களை கி.கிராம்களுடன் கூட்டுக மற்றும் கிராம்களை கிராம்களுடன் கூட்டுக. மொத்த எடையைக் கண்டுபிடிக்க.

காய்கறி	எடை
உருளைக்கிழங்கு	9 கி.கிராம் 450 கிராம்
வெங்காயம்	10 கி.கிராம் 300 கிராம்
கேரட்	12 கி.கிராம் 200 கிராம்
மொத்தம்	**31** கி.கிராம் **950** கிராம்

@KTBS NOT TO BE REPUBLISHED

பயிற்சி 12.2

I. கீழ்காண்பனவற்றைக் கூட்டுக

1) 42கிகிராம்
58 கிகிராம்
____
____

2) 120 கிகிராம்
45 கிகிராம்
____
____

3) 150 கிகிராம்
240 கிகிராம்
____
____

4) 57 கிகிராம் 126 கிராம்
39 கிகிராம் 245 கிராம்
____
____

5) 136 கிகிராம் 240 கிராம்
27 கிகிராம் 126 கிராம்
____
____

6) 324 கிகிராம் 360 கிராம்
112 கி,கிராம் 6 கிராம்
____
____

II. கீழ்காணும் கணக்குகளைத் தீர்க்க.

1) சுனிலின் எடை 45 கி கிராம், அஸ்லாம் அவனை விட 3 கிகிராம் கூடுதலாக உள்ளான். அஸ்லாமின் எடை என்ன?

____

____

____

____

2) ரீனா ஒரு விழாவிற்கு 10 கி.கிராம் மாம்பழம், 15 கி.கிராம் கொய்யாப்பழம் மற்றும் 12 கி.கிராம் சாத்துக்குடியை வாங்கினாள். அவள் வாங்கிய பழங்களின் மொத்த எடையைக் கண்டுபிடிக்க.

____

____

____

____

@KTBS NOT TO BE REPUBLISHED

3) இனிப்பு கடைக்காரர் காலை 3 கி.கிராம் 200 கிராம், மதியம் 6 கி.கிராம் 600 கிராம் இனிப்புப் பண்டங்களை விற்கிறார். அவர் விற்ற இனிப்பின் மொத்த எடை என்ன?

____

____

____

____

4) பூ வியாபாரியிடம் 7 கி.கிராம் 300 கிராம் மல்லி மொட்டு, 5 கி.கிராம் 450 கிராம் ரோஜாப் பூ மற்றும் 10 கி.கிராம் சாமந்திப்பூ உள்ளது. அவரிடமுள்ள மொத்த பூக்களின் எடை என்ன?

____

____

____

____

@KTBS NOT TO BE REPUBLISHED

எடையைக் கழித்தல்

இராணி கூட்டுறவு சங்கத்திலிருந்து 5 கி.கிராம் 500 கிராம் கோதுமை வாங்கினாள். வீட்டிற்கு வந்து பார்த்தபோது சிறிதளவு கோதுமை பையிலிருந்து சிந்திவிட்டதைக் கவனித்தாள். அப்படியென்றால் வீணாகிப்போன கோதுமையின் எடை என்ன? இதை எப்படிக் கண்டுப்பிடிப்பீர்கள்? சிந்திக்க.

வீணாகிப் போன கோதுமையை சேகரித்து கண்டுபிடிக்க முடியுமா? முடியாது அல்லவா அப்படியென்றால் வேறு எந்த முறையில் கண்டுபிடிக்கலாம்?

பையில் மீதியிருக்கும் கோதுமையை இன்னொரு முறை எடை போடுக. எடை என்ன? வாங்கும்போது இருந்த எடையை விட இந்த எடை குறைவாக உள்ளது அல்லவா?

எடுத்துக்காட்டாக 5 கி.கிராம் 300 கிராம் எடை உள்ளது என்று எடுத்துக்கொள்வோம். எவ்வளவு கோதுமை வீணாகியுள்ளது.

கோதுமையின் முதல் எடை மற்றும் அதன்பிறகு போட்ட எடையின் வித்தியாசமே சிந்திய கோதுமையின் எடையல்லவா?

எடையின் வித்தியாசத்தை எப்படிக் கண்டுபிடிக்கலாம்

உனக்கு ஏற்கனவே எண்களின் வித்தியாசத்தைக் கண்டுபிடிக்கும் முறை தெரியும். ஸ்தானமதிப்பிற்கேற்ப எண்களின் வித்தியாசத்தை எப்படி கண்டு பிடிப்பாயோ அதே முறையில் எண்களின் வித்தியாசத்தைக் கண்டுபிடிக்க.

கி.கிராமிலிருந்து கி.கிராமைக் கழிக்க. கிராமிலிருந்து கிராமைக் கழிக்க.

வாங்கிய கோதுமையின் அளவு	= 5 கி,கிராம் 500 கிராம்
மீதமுள்ள கோதுமையின் அளவு	= 5 கி.கிராம் 300 கிராம்
சிந்திப்போன கோதுமையின் அளவு	= **0** கி.கிராம் 200 கிராம்

@KTBS
NOT TO BE REPUBLISHED

பயிற்சி 12.3

I. **கீழ்காண்பனவற்றின் வித்தியாசத்தைக் கண்டுபிடிக்க.**

1) 34 கி.கிராம்
-12 கி.கிராம்

2) 249 கி.கிராம்
- 136 கி.கிராம்

3) 542 கி.கிராம்
299 கி.கிராம்

4) 36 கி.கிராம் 27 கிராம்
24 கி.கிராம் 12 கிராம்

5) 94 கி.கிராம் 174 கிராம்
39 கி.கிராம் 098 கிராம்

6) 298 கி.கிராம் 248 கிராம்
149 கி.கிராம் 248 கிராம்

II. **கீழ்காண்பனவற்றைத் தீர்க்க:**

1) ஆனந்தின் எடை 30 கி.கிராம் 750 கிராம். சுரேஷின் எடை 28 கி.கிராம் 250 கி.கிராம். இவர்களில் யாருடைய எடை அதிகம்? எவ்வளவு அதிகம்?

2) ஒரு விறகு மண்டியில் காலை 550 கி.கிராம் விறகு இருந்து மாலை 200 கி.கிராம் விறகு மீதமானால் மண்டிக்காரன் விற்ற விறகின் அளவு என்ன?

3) அப்துல் 30 கி.கிராம் அரிசியை வாங்கினான். அதில் 19 கி.கிராம் அரிசியைப் பயன்படுத்தினால் மீதமுள்ள அரிசியின் அளவு என்ன?

@KTBS NOT TO BE REPUBLISHED

4) குழந்தையின் பெயர் சூட்டுவிழாவிற்காக 20 கி.கிராம் 250 கிராம் இனிப்பினை வாங்கினார்கள். அதில் 13 கி.கிராம் இனிப்பு எல்லோருக்கும் கொடுக்கப்பட்டது. மீதமுள்ள இனிப்பின் அளவு என்ன?

____

____

____

____

தோராய எடை மற்றும் சரியான எடை

பலர் அன்றாட வாழ்க்கைச் சூழ்நிலைகளில் பொருட்களின் சரியான எடையைக் கூறாமல் அதன் எடையை ஊகித்துக் கூறுவதை நீ கவனித்திருப்பாய்.

எ.கா: உன் கணிதப் புத்தகத்தின் எடை என்ன? பிளாஸ்டிக் நாற்காலியின் எடை என்ன?

இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் அவற்றின் சரியான எடையைவிட சற்று அதிகமாகவோ அல்லது குறைவாகவோ இருக்கும். இப்படி கூறிய எடையயை என்னவென்று குறிப்பிடுவாய். சிந்திக்க.

இதையே தோராய எடை என்பர்.

சில பொருட்களை பட்டியல் செய்து அதனுடைய தோராய எடையை எழுதுக.

பொருட்கள்	**தோராய எடை**
எ.கா: டஸ்டர்	150 கிராம்
1)	....
2)	....
3)	....

NOT TO BE REPUBLISHED @KTBS

நீ பட்டியல் செய்த அனைத்துப் பொருட்களின் தோராய எடை அதனுடைய சரியான எடைக்கு சமமாக உள்ளதா? எப்படி அறிந்துக்கொள்வோய்.

அப்பொருட்களைத் தராசு ஒன்றைப் பயன்படுத்தி எடை போட்டால் அதன் சரியான எடையை அறியலாம். சரியான எடையை வழுவற்ற எடை என்றும் அழைக்கலாம்.

பயிற்சி 12.4

வரிசை எண் (1) க்கு பின் கொடுக்கப்பட்டுள்ள பொருட்களின் தோராய எடை மற்றும் சரியான எடையைக் கண்டுபிடித்து கீழ்காணும் பட்டியலில் எழுதுக. இதற்காக பள்ளியில் உள்ள தராசை ஆசிரியரின் உதவி பெற்று பயன்படுத்துக.

வ.எண்	பொருட்கள்	தோராய எடை	சரியான எடை
1.	சுத்தி	1 கி.கிராம்	1 கி.கிராம் 200 கிராம்
2.	உணவுத் தட்டு		
3.	சீமைச்சுண்ணாம்பு நிறைக்கப்பட்டுள்ள பெட்டி		
4.	சாவி		
5.	உன் புத்தகப் பை		
6.	குளோப்		

@KTBS NOT TO BE REPUBLISHED

செயல்பாடு : பொருட்களின் சரியான எடையைக் கண்டுபிடிக்கும் முறை உனக்குத் தெரியும். அப்படியே வாகனங்களின் சரியான எடையைக் கண்டுபிடிப்பது எப்படி? உன் ஆசிரியருடன் கலந்துரையாடி அறிந்துக் கொள்க.

அலகு-13

கொள்ளளவு

R7Y8Y2

இவ்வலகைக் கற்றபின் நீங்கள்:

- கொடுக்கப்பட்டுள்ள பாத்திரத்தின் சேகரிப்புத் திறனை கொள்ளளவு என்று அறிவாய்
- லிட்டர் மற்றும் மில்லி லிட்டர் அலகுகளினிடையேயுள்ள தொடர்பை அறிவாய்
- கன அளவுகளைக் கூட்டுவாய்
- கன அளவுகளைக் கழிப்பாய்
- கன அளவை தோராயமாக்குவாய் பிறகு அளந்து அதன் சரியான அளவை ஒப்பிடுவாய்

NOT TO BE REPUBLISHED @KTBS

அன்றாட வாழ்க்கையில் நாம் பால் வாங்குகின்றோம். இது உங்களுக்குத் தெரியும் அல்லவா?

பால்காரர் பாலை அளக்கப் பயன்படுத்தும் உபகரணத்தை கவனித்தருக்கிறாயா?

பால் விற்பவர் சிறிய மற்றும் பெரிய பாத்திரங்களைப் பயன்படுத்துவதை நீங்கள் கவனிக்கலாம்.

நீ கடந்த வகுப்பில் நீர்மத்தை அளக்கும் அளவையைப் பற்றி அறிந்தாய். திரவங்களை லிட்டர்களில் அளக்கின்றோம்.

நினைவில் கொள்க: 1 லிட்டர் = 1000 மில்லி லிட்டர் (மி.லி)

இப்படத்தைக் கவனி:



இந்த அளவைப் பாத்திரத்தில் எவ்வளவு திரவத்தை நிரப்பலாம்?

இது 1000 மில்லி லிட்டர் அளவைப் பாத்திரம் அல்லவா?

இப்பாத்திரத்தைக் கவனி. அதில் 600 மில்லி லிட்டர் திரவம் உள்ளது அல்லவா?

ஒரு பாத்திரத்தில் கொள்ளும் திரவத்தின் அளவை, அப்பாத்திரத்தின் "கொள்ளளவு" என்பர்

கொள்ளளவை அளக்கப் பயன்படும் அலகு லிட்டர் ஆகும்.

இதன் கொள்ளளவு 1 லிட்டர்

இதன் கொள்ளளவு 5 லிட்டர்.

செயல்பாடு : ஒரு பால்காரரிடம் 200 மி.லி அளவையுள்ளது. அவர் 1லி பாலை இராஜீவ் வீட்டிற்குக் கொடுக்கவேண்டும்? அவர் பாலை கொடுக்க நீங்கள் உதவுவீர்களா?

அவர் 200 மி.லி அளவையைக் கொண்டு 5 முறை ஊற்றவேண்டுமல்லவா?

எனவே 5 × 200 = 1000 மி.லி = 1 லி.

200 மில்லி அளவையைப் பயன்படுத்தி ஒரு பக்கெட்டிலுள்ள நீரை அளக்க முடியுமா?

முயற்சிசெய்க.

இப்படி அளவிடுவது சுலபமல்ல

அப்படியென்றால் நாம் அதிக அளவு நீரை அளக்க மில்லிலிட்டரைவிட பெரிய அளவையை பயன்படுத்த வேண்டும். அதனை லிட்டர் என்பர்.

சிறிய அளவு நீரை அளக்க மில்லிலிட்டரைப் பயன்படுத்துகிறோம்.

நினைவில் கொள் : லிட்டரை`லி' என்றும். மில்லி லிட்டரை `மி.லி' என்றும் எழுதுகிறோம்.

சிறிய அளவுகளில் திரவத்தை அளக்க மில்லி லிட்டரைப் பயன்படுத்துகிறோம்.

© KTBS NOT TO BE REPUBLISHED

நினைவில்கொள்:	
	1 லிட்டர்(லி)=1000 மில்லி லிட்டர் (மி.லி)
	$\frac{3}{4}$ லிட்டர்(லி)= 750 மில்லி லிட்டர்(மி.லி)
	$\frac{1}{2}$ லிட்டர் (லி) =500 மில்லி லிட்டர் (மி.லி)
	$\frac{1}{4}$ லிட்டர்(லி) =250 மில்லி லிட்டர் (மி.லி)

நமது அன்றாட வாழ்க்கையில் மில்லி லிட்டரைப் பயன்படுத்தும் சூழ்நிலைகளைப் பட்டியலிடுக.

1) ....

2) ....

லிட்டரைப் பயன்படுத்தி அளக்கும் மூன்று சூழ்நிலைகளைப் பட்டியலிடுக.

1) ....

2) ....

திரவங்களை அளக்கும் வெவ்வேறு அளவைகளைக் கவனிக்க.

இவ்வளவைகளை எங்கு பயன்படுத்துகிறோம் என்பதைப் பற்றி சிந்திக்க.

@KTBS NOT TO BE REPUBLISHED

லிட்டரை மில்லிட்டராக மாற்றுதல் .

1 லிட்டர் = 1000 மில்லி லிட்டர் என்பதை நாம் அறிவோம்.

அதைப் பயன்படுத்தி லிட்டர்களை மில்லி லிட்டராக மாற்ற முடியுமா? •முயற்சிக்க.

கீழ்காணும் எடுத்துக்காட்டுகளை கவனிக்க.

1 லி = 1000 மி.லி.

2 லி = 2 × 1000 = 2000 மி.லி.

5 லி = 5 × 1000 = 5000 மி.லி.

ஆகவே லிட்டரை மில்லி லிட்டராக மாற்ற 1000 ஐக் கொண்டு பெருக்கவேண்டும் என்பதை அறிக.

எடுத்துக்ககாட்டு 1: 8 லிட்டரை மில்லி லிட்டராக மாற்றுக.

8 லி = 8 × 1000

= 8000 மி.லி

எடுத்துக்காட்டு 2: 3 லிட்டர் 8 மி.லி.ஐ மில்லி லிட்டராக மாற்றுக.

3 லிட்டர் 20 மில்லி லிட்டர் =3 ×1000 + 20 மில்லி லிட்டர்

= 3000 + 20

= 3020 மில்லி லிட்டர்

NOT TO BE REPUBLISHED @KTBS

பயிற்சி 13.1

I. **கீழ் காணும் சூழ்நிலைகளில் அளவுகளைக் குறிப்பிடும் அலகுகளை எழுதுக.**

1) ஒரு டிரம்மிலிருக்கும் மண்ணெண்ணெய் ______________

2) ஒரு தம்ளரில் உள்ள பால் ______________

3) ஒரு பாட்டிலில் உள்ள மை ______________

4) ஒரு பக்கெட்டிலிருக்கும் நீர் ______________

5) ஒரு பாட்டிலில் இருக்கும் மருந்து ______________

II. **கீழ் காணும் லிட்டர் அலகுகளை மில்லி லிட்டராக மாற்றுக.**

1) 3 லி = ____________

2) 7 லி = ____________

3) 2 லி 500 மி.லி = ____________

4) 6 லி 250 மி.லி = ____________

III. **`அ' பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ள திரவத்தின் முகத்தலளவுகளை `ஆ' பட்டியலுடன் பொருத்து. விடைகளை காலியிடங்களில் எழுதுக.**

`அ' பட்டியல்	**`ஆ'பட்டியல்**	**விடைகள்**
1) 4 லிட்டர்	a) 3100மி.லிட்டர்	1)____________
2) 9 லிட்டர்	b) 5050 மி.லிட்டர்	2)____________
3) 1 லி 250 மி.லிட்டர்	c) 4000 மி.லிட்டர்	3)____________
4) 5 லி 50 மி.லிட்டர்	d) 9000 மி.லிட்டர்	4)____________
5) 3 லி 100 மி.லிட்டர்	e) 1250 மி.லிட்டர்	5)____________

மில்லி லிட்டரை லிட்டராக மாற்றுதல்.

1 லிட்டர் 1000 மில்லி லிட்டருக்கு சமம் என்பது உங்களுக்குத் தெரியும். இப்பொழுது மில்லி லிட்டரை லிட்டராக மாற்ற முடிமா? முயற்சிக்க.

1000 மில்லி லிட்டர் = 1 லிட்டர்

2000 மில்லி லிட்டர் = $\left[\frac{2000}{1000}\right]$ = 2 லிட்டர்

3000 மில்லி லிட்டர் = $\left[\frac{3000}{1000}\right]$ = 3 லிட்டர்

மேற்காணும் எடுத்துக்காட்டுகளில் நாம் செய்த கணிதச் செயல் என்ன என்பதைக் கூறுக?

> மில்லி லிட்டரை லிட்டராக மாற்ற 1000ஐக் கொண்டு வகுக்கவேண்டும்.

எடுத்துகாட்டு 1: 8000 மில்லி லிட்டரை லிட்டராக மாற்றுக.

$$8000 \text{ மி.லி} = \frac{8000}{1000} = 8 \text{ லி}$$

NOT TO BE REPUBLISHED @KTBS

எடுத்துகாட்டு 2: 6860 மில்லி லிட்டரை லிட்டராக மாற்றுக.

6860 = 6000 மி.லி + 860 மி.லி

= $\frac{6000}{1000}$ + 860 மி.லி

= 6 லி 860 மி.லி.

பயிற்சி 13.2

I. **லிட்டராக மாற்றுக.**

1) 5000 **மி.லி** = __________ 2) 9000 **மி.லி** = __________

3) 6000 மி.லி = __________

II. **விடுப்பட்ட இடங்களை சரியான விடைகளைக் கொண்டு நிரப்புக.**

1) 7250 மி.லி= __________ லி + __________ மி.லி

2) 3000 மி.லி = __________ லி + __________ மி.லி

3) 7025 மி.லி= __________ லி + __________ மி.லி

முகத்தலளவுகளின் கூட்டல்

சுஜாதா ஒரு எண்ணெய் வியாபாரியிடம் சில எண்ணெய் வகைகளை வாங்கினாள். 21 லி 500 மி.லி சூரிய காந்தி எண்ணெய், 1 லி 000 மி.லி தேங்காய் எண்ணெய், 2 லி 000 மிலி கடலை எண்ணெய் வாங்கினாள். சுஜாதா வாங்கிய மொத்த எண்ணெயின் அளவைக் கண்டுபிடிக்க முயற்சி செய்க.

சுஜாதா வாங்கிய எண்ணெயின் அளவு கீழ்காணும் பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ளது.

எண்ணெயின் பெயர்	அளவு	
சூரியகாந்தி எண்ணெய் தேங்காய் எண்ணெய் கடலை எண்ணெய்	2 லி 1 லி 2 லி	500 மி.லி 000 மி.லி 000 மி.லி
வாங்கிய எண்ணெயின் மொத்த அளவு	5 லி	500 மி.லி

கவனிக்க : மில்லி லிட்டர் (மி.லி) மற்றும் லிட்டர். (லி)தனித்தனியாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

©KTBS NOT TO BE REPUBLISHED

எடுத்துகாட்டு 1: அபிஜித் தன்னுடைய வீட்டிற்கு 3 வகை வண்ணங்களைப் பயன்படுத்தியுள்ளான். அவன் 12 லி 500 மி.லி வெள்ளை நிறம். 3 லி 000மி.லி பழுப்பு நிறம் மற்றும் 1 லி 100 மி.லி கருமை நிறத்தைப் பயன்படுத்தியுள்ளான். அவன் பயன்படுத்திய வண்ணங்களின் மொத்த அளவினைக் கண்டுபிடிக்க.

வெண்மை நிறத்தின் அளவு	=	12 லி 500 மி.லி
பழுப்பு நிறத்தின் அளவு	=	3 லி 000 மி.லி
கருமை நிறத்தின் அளவு	=	1 லி 000 மி.லி
∴ நிறங்களின் மொத்த அளவு	=	16 லி 500 மி.லி

பயிற்சி 13.3

I. **இவ்வளவுகளைக் கூட்டுக.**

1) 250 மி.லி
500 மி.லி

2) 400 மி.லி
500 மி.லி

3) 125 லி
220 லி

4) 3 லி 500 மி.லி
5 லி 200 மி.லி

II. **இக்கணக்குகளைத் தீர்க்க.**

1) **ஒரு பால் வியாபாரி திங்கட்கிழமை 85 லி 250 மி.லி மற்றும் செவ்வாய் கிழமை 97 லி 500 மி.லி பாலை டெய்ரிக்கு தருகிறான். இரண்டு நாட்களும் டெய்ரிக்குத் தந்த பாலின் மொத்த அளவு என்ன?**

